RNI-NO: TNTAM/2021/83936

Postel Regd. No: TN/5/SVA/2023-2025




# மாலை தந்தி
MALAI THANTHI

தமிழால் வெல்வோம்

DAILY EVENING www.malaithanthi.in மாலை நாளிதழ்




சிவகங்கை மலர்-5 இதழ்- 177 ஜூலை.3 2026 வெள்ளிக்கிழமை malaithanthi2020@gmail.com 4 பக்கங்கள் விலை ரூ.5

# தவெகவில் இணைந்த சி.விஜயபாஸ்கர், எம்.ஆர்.விஜயபாஸ்கர் அடுக்கிய பழனிசாமி மீதான குற்றச்சாட்டுகள்!

மாமல்லபுரம்: ஜூலை.3-

“தவெக உடன் கூட்டணி வைக்க வேண்டும் என்று தேர்தலுக்கு முன்பும், தேர்தலுக்குப் பின்பும் வலியுறுத்தினோம். ஆனால், அதிமுக தலைமை அதற்கு செவிமடுக்கவில்லை” என்று தவெகவில் இணைந்த சி.விஜயபாஸ்கர் குற்றம் சாட்டியுள்ளார்.

அதிமுக முன்னாள் அமைச்சர்கள் சி.விஜயபாஸ்கர், எம்.ஆர்.விஜயபாஸ்கர் மற்றும் அவரது ஆதரவாளர்கள் தவெகவில் இணையும் விழா சென்னையை அடுத்த மாமல்லபுரத்தில் இன்று நடைபெற்றது. இதில், தவெக பொதுச் செயலாளரும், அமைச்சருமான ஆனந்த், அமைச்சர் செங்கோட்டையன், அமைச்சர் ஆதவ் அர்ஜுனா உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

தொடக்க உரை நிகழ்த்திய செங்கோட்டையன், அனைவரையும் வரவேற்றுப் பேசினார். இதையடுத்து, தவெக பொதுச் செயலாளர் ஆனந்த், சி.விஜயபாஸ்கர் மற்றும் எம்.ஆர்.விஜயபாஸ்கர் ஆகிய இருவருக்கும் தவெக கட்சித் துண்டை அணிவித்து வரவேற்று வாழ்த்து தெரிவித்தார். மேலும், இவர்களோடு சேர்ந்து தவெகவில் இணைந்த அதிமுகவின் நிர்வாகிகள் பலருக்கும் தவெக துண்டை அணிவித்து ஆனந்த் வரவேற்றார்.

இணைப்பு விழாவில் உரையாற்றிய சி.விஜயபாஸ்கர், “புதுக்கோட்டை மாவட்ட மக்களின் கருத்துக்களின் அடிப்படையில் தவெகவில் இணையும் முடிவை நாங்கள் எடுத்துள்ளோம். தவெக உடன் கூட்டணி வைக்க வேண்டும் என்று, தேர்தலுக்கு முன்னதாகவே நாங்கள் எங்கள் தலைமையிடம் கடுமையாக வலியுறுத்தினோம். தலைமை செவி மடுக்கவில்லை. தேர்தலுக்குப் பின்னரும், தமிழக மக்கள் ஏகோபித்த ஆதரவை தவெகவுக்கு வழங்கி இருக்கிறாரகள்.



எனவே, நாம் தவெகவுக்கு ஆதரவு அளிக்க வேண்டும் என்று வலியுறுத்தினோம். அதற்கும் தலைமை செவி மடுக்கவில்லை.

எம்ஜிஆரால் தீய சக்தி என அடையாளம் காட்டப்பட்ட திமுகவோடு கூட்டு சேர்ந்து ஆட்சி அமைக்க எடப்பாடி பழனிசாமி முயன்றதில் எங்களுக்கு உடன்பாடு இல்லை.

எதிர்கொண்ட முதல் தேர்தலிலேயே ஒட்டுமொத்த இந்தியாவையும் திரும்பிப் பார்க்க வைத்து, தமிழகத்தின் அரசியல் திசையை தீர்மானித்து, அண்டை மாநிலங்களை அதிரவைத்திருக்கும் மக்கள் விரும்பிய மாற்றத்தின் சக்தி நமது முதல்வர் விஜய். தமிழக அரசியலில் சத்தமின்றி மவுனப் புரட்சியாக மாபெரும் அரசியல் புரட்சியை நிகழ்த்தியவர் விஜய். தமிழக மக்களை தனது நெஞ்சிலே குடியமர்த்தி இருக்கும் ஒரு தலைவரை நாம் பெற்றிருக்கிறோம்.

அத்தகைய தவெக குடும்பத்தில் நாங்கள் இன்று எங்களை இணைத்துக் கொண்டுள்ளோம். தமிழக மக்களின் கனவுக்கு இன்று ஒரு பாதை கிடைத்திருக்கிறது. எளிய மக்களின் குரலை செவி மடுக்க ஓர் இயக்கம் கிடைத்திருக்கிறது. நம் மண்ணுக்கும் மக்களுக்கும் சேவையாற்ற ஒரு களம் கிடைத்திருக்கிறது. மாற்றத்தை விரும்பிய ஒவ்வொரு மனசுக்கும் ஒரு நம்பிக்கை கிடைத்திருக்கிறது. தொண்டர்களை தோழர்களாகக் கருதும் தலைமைப் பண்புள்ள ஒரு தலைமையை நாம் பெற்றிருக்கிறோம். அதனால், இந்த இணைப்பு மகிழ்ச்சியை, மலர்ச்சியை, நம்பிக்கையை, புத்துணர்ச்சியைக் கொடுக்கிறது.

தவெக வேறு; தமிழகம் வேறு அல்ல என்ற மக்களின் தீர்ப்பை மனதில் ஏந்தி, வர இருக்கும் எல்லா தேர்தல்களிலும் இனி தவெக வெற்றி பெறும். உறுதியான அந்த ஒற்றைத் தலைமையில் நாம் பயணித்து வெற்றி வாகை சூடுவோம்.உங்களுக்கு துணை நிற்போம், உழைப்போம். எங்கள் உள்ளமெல்லாம் நிறைந்திருக்கும் இந்த நல்லாட்சி தொடர்ந்திட உழைத்திடுவோம்.

இங்கே நீங்கள் பார்ப்பது வெறும் ட்ரெயிலர்தான். மெயின் பிக்சரை டெல்டாவில் காட்டுவோம். தமிழகமே திரும்பிப் பார்க்கும் வகையில் மாபெரும் இணைப்பு விழாவை, இன்னொரு இணைப்பு விழாவை நாங்கள் அங்கு நடத்துவோம்” என தெரிவித்தார்.

முன்னதாக உரையாற்றிய எம்.ஆர். விஜயபாஸ்கர், “தீய சக்தி திமுகவை ஒழிக்க வேண்டும் என்பதற்காக அதிமுகவை தொடங்கியவர் எம்ஜிஆர். தவெகவை உருவாக்கி இரண்டே ஆண்டுகளில் ஆட்சிக்குக் கொண்டு வந்திருக்கிறார் விஜய். இது சாதாரண மாற்றம் அல்ல. இது ஒரு தலைமுறை மாற்றம்.

எடப்பாடி பழனிசாமியை நாங்கள் எல்லாம் சேர்ந்துதான் அதிமுகவின் பொதுச் செயலாளராக ஆக்கினோம். ஆனால், அவரது தவறான முடிவுகளால் அந்த இயக்கம் தள்ளாடிக் கொண்டிருக்கிறது. உண்மையை எடுத்துச் சொல்பவர்களை அவர் துரோகி என்கிறார். யார் துரோகி?

42 ஆண்டுகள் அரசியலில் இருந்தவன் நான். கரூரில் பல்வேறு சவால்களுக்கு மத்தியில் வெற்றி பெற்றவன் நான். நான் மட்டுமல்ல, ஒட்டுமொத்த கரூர் மாவட்ட அதிமுக நிர்வாகிகளும் இன்று தவெகவில் இணைந்திருக்கிறோம்.

ஒரு தலைவன் சரியான முடிவை எடுக்காவிட்டால், அந்த இயக்கம் எப்படி போகும் என்பதற்கு உதாரணம்தான் அதிமுகவின் இன்றைய நிலை. அடிமட்டத் தொண்டர்களின் உணர்வை புரிந்து கொள்ள வேண்டும். முதல்வர் விஜய் இன்னும் சில தினங்களில் கரூர் வர இருக்கிறார். அந்த கரூர் நிகழ்ச்சியில், இன்னும் அதிக அளவில் தொண்டர்கள் தவெகவில் இணைவார்கள் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்” எனத் தெரிவித்தார்.

## இந்தியா பாகிஸ்தான் இடையே சுமுக உறவு தேவை: பிரதமர்களுக்கு பிரபலங்கள் வேண்டுகோள்



புதுடெல்லி, ஜூலை.03-

பஹல்காம் தீவிரவாத தாக்குதலுக்கு பதிலடியாக இந்தியா ஆபரேஷன் சிந்தூர் நடவடிக்கையை மேற்கொண்டது. 3 நாட்கள் நீடித்த இந்த மோதல் பாகிஸ்தான் விடுத்த வேண்டுகோளையடுத்து முடிவுக்கு வந்தது.

அப்போது முதல் இந்தியா பாகிஸ்தான் இடையே தூதரக அளவிலான பேச்சுவார்த்தை எதுவும் நடைபெறவில்லை. இருநாட்டு விமான போக்குவரத்துக்கு எல்லையில் வான் வெளிகளும் மூடப்பட்டுள்ளது. மருத்துவ சிகிச்சைக்காக பாகிஸ்தான் மக்கள் இந்தியா வருவதும், சீக்கியர்கள் பாகிஸ்தானுக்கு புனித பயணம் செல்வதும் பாதிக்கப்பட்டது.

இந்நிலையில் இந்தியாவைச் சேர்ந்த 61 பிரபலங்களும், பாகிஸ்தானைச் சேர்ந்த 56 பிரபலங்களும் இணைந்து அமைதி மற்றும் முன்னேற்ற மையம்' என்ற பெயரில் பிரதமர் மோடி மற்றும் பாகிஸ்தான் பிரதமர் ஷெபாஸ் ஷெரீப் ஆகியோருக்கு கடிதம் எழுதியுள்ளனர். அந்தக் கடிதத்தில், “இரு நாடுகள் இடையே மீண்டும் சுமுக உறவு ஏற்பட தூதர்களை மீண்டும் நியமிக்க வேண்டும். விசா சேவைகளைத் தொடங்கி, வான்வெளியை திறந்து விட்டு இயல்பு நிலையை ஏற்படுத்த வேண்டும்" என கூறப்பட்டுள்ளது.

## முதல்வர் விஜய்யை எதிர்த்து போட்டியிட்ட அ.தி.மு.க., வேட்பாளர் த.வெ.க.,வில் ஐக்கியம்



திருச்சி, ஜூலை.03-

திருச்சி கிழக்கு தொகுதியில் முதல்வர் விஜய்யை எதிர்த்துப் போட்டியிட்ட அதிமுக வேட்பாளர் க.ராஜசேகரன் இன்று தவெகவில் இணையும் நிலையில், ‘மனவலியுடன் விலகுவதாக’ எடப்பாடி பழனிசாமிக்கு கடிதம் எழுதியுள்ளார்.

அதிமுக முன்னாள் அமைச்சர்கள் புதுக்கோட்டை சி.விஜயபாஸ்கர், கரூர் எம்.ஆர்.விஜயபாஸ்கர் ஆகியோருடன் திருச்சியைச் சேர்ந்த முன்னாள் அமைச்சர் எஸ்.வளர்மதி, மாநகர் மாவட்ட முன்னாள் தலைவர் சீனிவாசன் உள்ளிட்டோர் தவெகவில் இணைக்கின்றனர்.

அவர்களுடன் திருச்சி கிழக்கு தொகுதியில் முதல்வர் விஜய்யை எதிர்த்து போட்டியிட்ட அதிமுக வேட்பாளர் க.ராஜசேகரன் இன்று தவெகவில் இணைகிறார். இந்நிலையில், அதிமுக பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமிக்கு உருக்கமாக கடிதம் ஒன்றை அவர் எழுதியுள்ளார்.

அந்தக் கடிதத்தில் க.ராஜசேகரன், “அரசியல் கொள்கை சார்ந்த நிலைப்பாடுகள். மக்கள் நலன் குறித்த எனது பார்வை. எதிர்கால பொது வாழ்க்கைப் பயணத்தை முன்னிறுத்தி, ஆழ்ந்த சிந்தனைக்குப் பிறகு கனத்த இதயத்துடனும், கலங்கிய மனத்துடனும் எம்.ஜி.ஆர். தோற்றுவித்த, ஜெயலலிதாவால் வளர்த்தெடுக்கப்பட்ட மகத்தான இயக்கத்தின் திருச்சி மாநகர் மாவட்ட பொருளாளர் பொறுப்பு உள்ளிட்ட கட்சியின் அனைத்து பதவிகளில் இருந்தும், அடிப்படை உறுப்பினர் பொறுப்பில் இருந்தும், இன்றைய தினம் முதல் மனவலியுடன் விலகுகின்றேன்" என்று உருக்கமாக தெரிவித்துள்ளார்.

## “பழனிசாமி அ.தி.மு.க.,வை ஒரு பெரு நிறுவனமாக மாற்றிவிட்டார்” : செங்கோட்டையன் குற்றச்சாட்டு

சென்னை, ஜூலை.03-

எம்ஜிஆர் காலத்திலும், ஜெயலலிதா காலத்திலும் இயக்கமாக இருந்த அதிமுகவை, எடப்பாடி பழனிசாமி ஒரு பெரு நிறுவனமாக மாற்றி விட்டார் என்று தவெக மூத்த தலைவரும் வருவாய்த் துறை அமைச்சருமான செங்கோட்டையன் விமர்சித் துள்ளார்.



அதிமுக முன்னாள் அமைச்சர்கள் சி.விஜயபாஸ்கர், எம்ஆர் விஜயபாஸ்கர் மற்றும் அவரது ஆதரவாளர்கள் தவெகவில் இணையும் விழா சென்னையை அடுத்த மாமல்லபுரத்தில் இன்று நடைபெற்றது. இதில், தவெக பொதுச் செயலாளரும், அமைச்சருமான ஆனந்த், அமைச்சர் செங்கோட்டையன், அமைச்சர் ஆதவ் அர்ஜுனா உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

தவெகவில் இணைய வருகை தந்த அனைவரையும் வரவேற்று உரையாற்றிய செங்கோட்டையன், “துரோகம் எங்கே நடைபெற்று இருக்கிறது என்பதை நீங்கள் காண வேண்டும். திமுகவோடு இணைந்து முதல்வராகலாம் என எடப்பாடி பழனிசாமி கருதுகிறபோதுதான் அங்கு எல்லோருக்கும் கருத்து வேறுபாடு ஏற்பட்டிருக்கிறது.

தங்கள் பதவியை ராஜினமா செய்துவிட்டு அவர்கள் இங்கே வருகிறார்கள் என்றால், விஜய்யை நம்பினால் மட்டும்தான் நாடு வாழும், நாட்டு மக்கள் வாழ்வார்கள் என்ற நம்பிக்கையோடு இங்கே வந்திருக்கிறார்கள். துரோகம் செய்தவர்கள் அங்கே இருக்கக்கூடும். நல்லவர்கள் இங்கே வந்திருக்கிறார்கள். அவர்களை வரவேற்கிறேன். ஏனென்றால், நம்பிக்கை, நாணயம், எதிர்காலம் இங்கே (தவெகவில்) இருக்கிறது.

தமிழ் நாட்டு மக்கள் அதிக அளவில் வாக்களித்து வெற்றி பெற்றிருக்கும் இயக்கம் இது. இந்த இயக்கம் எங்காவது தடுமாறுமா என்று எதிர்பார்க்கும் நரியைப் போல திமுகவோடு பேசி, முதல்வராகலாம் என கனவு காண்கிறபோது அதை தகர்த்தெறிகிற சக்தியாகத்தான் நீங்கள் இங்கே வந்திருக்கிறீர்கள். உங்கள் அனைவருக்கும் எவ்வளவு நன்றி சொன்னாலும் போதாது.

பெரியார், அண்ணா, எம்ஜிஆர், ஜெயலலிதா வழியில் நின்றவர்கள் நாம். இன்றும் எனது சட்டைப்பையில் ஜெயலலிதாவின் புகைப்படம் இருக்கிறது. இதை அனுமதித்தவர் விஜய். அதுமட்டுமல்ல, “நீங்கள் ஜெயலலிதா படத்தை வைத்திருந்தால்தான் எனக்கு மகிழ்ச்சி,” என்று சொன்னவர் விஜய். ஆனால், அங்கே எடப்பாடி பழனிசாமியின் படம் இல்லையென்றால், அவரை கீழும் மேலுமாகப் பார்ப்பார்கள். நான் தூக்கி எறியப்பட்டபோது என்னை தாங்கிப் பிடித்து இன்று வருவாய்த்துறை அமைச்சராக ஆக்கியவர் விஜய். நம்பியவர்களைக் காக்கிற அரணாகவும், வழிகாட்டியாகவும் அவர் இருக்கிறார்.

நான் எல்லா தலைவர்களையும் பார்த்து விட்டு வந்திருக்கிறேன். அம்மாவை 21 நாட்கள் சிறைச்சாலையில் அடைத்த சதிகாரர்களோடு கூட்டணி வைப்பதை தகர்த்தெரிய வேண்டுமா வேண்டாமா? தகர்த்தெறிவதற்காகவே இவர்கள் இங்கே வந்திருக்கிறார்கள். துரோகம் இங்கே இல்லை. துரோகம் அங்கேதான் இருக்கிறது. அதை அடையாளம் காட்டியவர்கள் இவர்கள்.

ஏதோ கூட்டம் நடத்த வேண்டும் என்பதற்காக எடப்பாடி பழனிசாமி நேற்று மகளிர் அணியை வைத்து கூட்டம் நடத்தி இருக்கிறார். அங்கே இளைஞர்கள் இல்லை; வயதானவர்கள்தான் இருக்கிறார்கள். ஆனால், தவெகவில்தான் இளைஞர் பட்டாளம் இருக்கிறது. எதிர்க்கட்சித் தலைவராக எடப்பாடி பழனிசாமி மகிழ்ச்சியாக இருந்தார். இப்போது, அவருக்கு தேசியக் கொடி பறக்கும் கார் இல்லை; வீடும் இல்லை. கட்சிக்கார்களை வைத்து கம்பெனி நடத்தப் பார்க்கிறார்.

எம்ஜிஆர், ஜெயலலிதா காலத்தில் அதிமுக ஒரு இயக்கமாக இருந்தது. இப்போது அதிமுக ஒரு பெருநிறுவனம். அந்த பெரு நிறுவனத்தைவிட்டு இவர்கள் மனித நேயத்தோடு வெளி வந்திருக்கிறார்கள். அவர்களை வரவேற்கிறேன், வாழ்த்துகிறேன்.

விஜய் முதல்வராக பதவியேற்று இன்று 54வது நாள். இதன் கூட்டு எண் 9. எண் 9 என்பது நவக்கிரகங்களைக் குறிக்கும். இங்கே (தவெக) குரு இருக்கிறார். அங்கே (அதிமுக) சனி பிடித்திருக்கிறது. குருவை நம்பி வந்திருக்கிறீர்கள். வெற்றியைக் காணுங்கள்” எனத் தெரிவித்தார்.

இதையடுத்து, தவெக பொதுச் செயலாளர் ஆனந்த், சி. விஜயபாஸ்கர் மற்றும் எம்.ஆர். விஜயபாஸ்கர் ஆகிய இருவருக்கும் தவெக கொடியின் வண்ணத்திலான துண்டை அணிவித்து வரவேற்று வாழ்த்து தெரிவித்தார். மேலும், இவர்களோடு சேர்ந்து தவெகவில் இணைந்த அதிமுகவின் நிர்வாகிகள் பலருக்கும் தவெக துண்டை அணிவித்து ஆனந்த் வரவேற்றார்.

## தெலங்கானாவில் ‘புஷ்பா’ பட பாணியில் கடத்த முயன்ற ரூ.2.62 கோடி கஞ்சா பறிமுதல்

ஹைதராபாத், ஜூலை.03-

தெலங்கானா மாநிலம், பத்ராத்ரி கொத்தகூடம் மாவட்டம், சாரபாக்கா எனும் இடத்தில் "ஈகல்' அதிரடிப்படை மற்றும் போலீஸார் தீவிர வாகன சோதனையில் ஈடுபட்டனர். அப்போது அவ்வழியாக சென்ற கண்டெய்னர் லாரியை சந்தேகத்தின் பேரில் போலீஸார் சோதனையிட்டனர்.

அப்போது, அதில் 'புஷ்பா' திரைப்படப் பாணியில் கண்டெய்னர் லாரிக்குள் 2 அடுக்கு இரும் புத்திரை அமைத்து, அதற்குள் 525 கிலோ எடையுள்ள கஞ்சா பொட்டலங்களை மறைத்து கடத்தி செல்வது தெரியவந்தது. உடனே அந்த லாரியையும், அதில் இருந்தவர்களையும் கைது செய்து விசாரணை நடத்தினர்.

ஒடிஷாவை சேர்ந்த சஹதேவ் பாண்டில் என்பவர், அந்த மாநிலத்தில் உள்ள அல்லூரி கோட்டை வனப்பகுதியில் கூலி ஆட்களை வைத்து கஞ்சாவை சட்ட விரோதமாக பறித்துள்ளார். இதனை அதே கூலி ஆட்களை வைத்து ஆந்திர மாநிலம், துலசி பாக்காவுக்கு அனுப்பி வைத்துள்ளார். அங்கிருந்து இவை புஷ்பா கண்டெய்னர் மூலம் உத்தர பிரதேச மாநிலத் துக்கு கடத்தும் பணிகள் நடந்தன.

இது பத்ராசலம், கம்மம், வாரங்கல், ஆதிலாபாத் வழி யாக உத்தர பிரதேசத்துக்கு கடத்த திட்டமிடப்பட்டது விசாரணையில் தெரிய வந்துள்ளது. இந்நிலையில், கொத்தகூடம் போலீஸா ருக்கு கிடைத்த ரகசிய தகவலால் இந்த வாகனம் சோதனை செய்யப்பட்டு, 525 கிலோ கஞ்சாவுடன் பறிமுதல் செய்யப்பட்டது. மேலும், இந்த வாகனத்துக்கு எஸ்கார்ட் போல் முன்னால் வந்த ஒரு பைக் மற்றும் 5 செல்போன்களும் பறிமுதல் செய்யப்பட்டன.

இது தொடர்பாக சஹதேவ் பாண்டில், ஆந்திராவைச் சேர்ந்த திரிநாத், உத்தர பிரதேசத்தைச் சேர்ந்த லாரி ஓட்டுநர் குல்தீப் ஷர்மா உட்பட ஒரு சிறுவனையும் போலீஸார் பிடித்து விசாரித்து வருகின்றனர் தலைமறைவாக உள்ள மேலும் சிலரையும் தேடி வருவதாக போலீஸார் தெரிவித்துள்ளனர்.



## குன்னூர் பிராவிடென்ஸ் கல்லூரியில் முதலாமாண்டு மாணவிகள் அறிமுக விழா

நீலகிரி, ஜூலை.3-

நீலகிரி மாவட்டம் குன்னூர் பிராவிடென்ஸ் மகளிர் தன்னாட்சிக் கல்லூரியில், புதிதாகச் சேர்ந்த மாணவிகள் மற்றும் அவர்களது பெற்றோர்களை வரவேற்கும் விதமாக முதலாமாண்டு மாணவிகள் அறிமுக விழா நடைபெற்றது. மாணவிகளின் ஒட்டுமொத்த வளர்ச்சி, கல்லூரியின் நெறிமுறைகள் மற்றும் கல்விச் சூழல் குறித்து அவர்களுக்குத் தெளிவுபடுத்துவதே இவ்விழாவின் முக்கிய நோக்கமாகும். இவ்விழாவில் கல்லூரியின் செயலர் அருட்சகோதரி அல்போன்சா , முதல்வர் முனைவர் ஹேமா ஸ்ரீ குமார், உள்தர மதிப்பீட்டுக் குழு ஒருங்கிணைப்பாளர் முனைவர் சவிதா மற்றும் மாணவிகள் டீன் முனைவர் கவிதா குமரன் ஆகியோர் கலந்துகொண்டு மாணவிகளையும் பெற்றோர்களையும் அன்போடு வரவேற்றனர். அவர்கள் தங்களது உரையில், கல்லூரியின் கல்வித் தரம், ஒழுக்கம் மற்றும் மதிப்புக்கூட்டப்பட்ட கல்வி ஆகியவற்றின் முக்கியத்துவத்தை எடுத்துரைத்து, மாணவிகள் தங்களுக்குக் கிடைக்கும் வாய்ப்புகளைச் சிறந்த முறையில் பயன்படுத்திக்கொள்ள வேண்டும் என அறிவுறுத்தினர். தொடர்ந்து நடைபெற்ற உங்கள் கல்லூரியைத் தெரிந்துகொள்ளுங்கள் என்ற தலைப்பிலான முதன்மை அமர்வை தேர்வு கட்டுப்பாட்டாளர் முனைவர் பியூலா விஜயராணி நடத்தினார். அவர் கல்லூரியின் பாரம்பரியம், நோக்கம், கல்வி விதிமுறைகள், ஒழுக்க நெறிமுறைகள் மற்றும் வளாகப் பண்பாடு குறித்து விளக்கினார். மேலும், மாணவிகள் தங்களின் தனிப்பட்ட பொறுப்புணர்வு, நற்பண்புகள் மற்றும் தொடர் கற்றல் திறனை வளர்த்துக்கொண்டு தங்களது கல்லூரிப் பயணத்தை நம்பிக்கையோடு தொடங்க வேண்டும் என்று ஊக்கப்படுத்தினார். மாணவிகள் கல்லூரியின் நன்மதிப்பைக் காத்து, அனைத்துத் துறைகளிலும் சிறந்து விளங்க வழிகாட்டும் ஒரு அர்த்தமுள்ள கல்விப் பயணத்தின் தொடக்கமாக இவ்விழா அமைந்தது.

## கோத்தகிரியில் 700க்கும் மேற்பட்ட மாணவர்கள் பங்கேற்ற போதைப்பொருள் ஒழிப்பு விழிப்புணர்வு பேரணி




கோத்தகிரி, ஜூலை.3-

நீலகிரி மாவட்டம் கோத்தகிரியில் போதைப்பொருள் ஒழிப்பு குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் ஒரஷோலயன்ஸ் வெல்ஃபேர் டிரஸ்ட் சார்பில், லயன்ஸ் கிளப் கோத்தகிரி, இந்திய செஞ்சிலுவைச் சங்கம், கோத்தகிரி குடிமக்கள் நலச்சங்கம், பிரஜாபிதா பிரம்மகுமாரிகள் ஈஸ்வரிய விஸ்வ வித்யாலயா மற்றும் சாய் நிவாஸ் சேவா பவுண்டேஷன் ஆகிய அமைப்புகளின் இணைப்பில் பிரம்மாண்டமான போதைப்பொருள் ஒழிப்பு விழிப்புணர்வு பேரணி நடைபெற்றது. இப்பேரணியை குன்னூர் சட்டமன்ற உறுப்பினர் கே. எம். ராஜூ கொடியசைத்து தொடங்கி வைத்தார். அப்போது அவர் பேசுகையில், போதைப்பொருள் பழக்கம் இளைஞர்களின் எதிர்காலத்தை சீரழிக்கும் மிகப்பெரிய சமூகப் பிரச்சினையாக உருவெடுத்து வருவதாகவும், மாணவர்கள் போதைப்பொருள் ஒழிப்புக்கான விழிப்புணர்வை சமூகத்தில் ஏற்படுத்தும் முன்னோடிகளாக செயல்பட வேண்டும் என்றும் வலியுறுத்தினார்.கோத்தகிரி மற்றும் அதன் சுற்றுவட்டாரப் பகுதிகளில் உள்ள பல்வேறு பள்ளிகளைச் சேர்ந்த 700க்கும் மேற்பட்ட மாணவர்கள் பேரணியில் உற்சாகமாக பங்கேற்று, போதைப்பொருள் ஒழிப்பை வலியுறுத்தும் பதாகைகளை ஏந்தியும், விழிப்புணர்வு முழக்கங்களை எழுப்பியும் பொதுமக்களிடம் விழிப்புணர்வை ஏற்படுத்தினர்.காந்தி மைதானத்தில் தொடங்கிய பேரணி, கோத்தகிரி நகரின் முக்கிய வீதிகள் மற்றும் மக்கள் அதிகம் கூடும் பகுதிகள் வழியாகச் சென்று மீண்டும் காந்தி மைதானத்தில் நிறைவடைந்தது.நிகழ்ச்சியின் நிறைவாக பிரஜாபிதா பிரம்மகுமாரிகள் ஈஸ்வரிய விஸ்வ வித்யாலயா சார்பில், போதைப்பொருள் பயன்பாட்டால் தனிநபர், குடும்பம் மற்றும் சமூகத்திற்கு ஏற்படும் தீமைகளை எடுத்துரைக்கும் விழிப்புணர்வு நாடகம் அரங்கேற்றப்பட்டது. இந்த நாடகம் மாணவர்கள் மற்றும் பொதுமக்களிடையே பெரும் வரவேற்பைப் பெற்றது.இந்த பேரணியில் பள்ளி மாணவர்கள், ஆசிரியர்கள், தன்னார்வலர்கள், சமூக ஆர்வலர்கள் மற்றும் பொதுமக்கள் திரளாக பங்கேற்று நிகழ்ச்சியை சிறப்பித்தனர்.நிகழ்ச்சியில் பங்கேற்ற அனைத்து பள்ளி நிர்வாகங்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், இணை அமைப்புகள், தன்னார்வலர்கள் மற்றும் பொதுமக்களுக்கு ஒரஷோலயன்ஸ் வெல்ஃபேர் டிரஸ்ட் சார்பில் நன்றி தெரிவிக்கப்பட்டது. போதைப்பொருள் இல்லாத, ஆரோக்கியமான மற்றும் பாதுகாப்பான சமூகத்தை உருவாக்கும் நோக்கில் இதுபோன்ற விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் தொடர்ந்து நடத்தப்படும் என்றும் ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர்.



## சேலத்தில் நடந்த14வது தேசிய ஓப்பன் டேக்வாண்டோ விளையாட்டு போட்டிகளில்கிருஷ்ணகிரி மாணவ, மாணவிகள் பதக்கங்கள் பெற்று சாதனை

கிருஷ்ணகிரி, ஜூலை.3-

சேலத்தில் நடந்த 14வது தேசிய ஓப்பன் டேக்வாண்டோ விளையாட்டு போட்டிகளில் கிருஷ்ணகிரி மாணவ, மாணவிகள் பதக்கங்கள் பெற்று சாதனை படைத்தனர்.சேலம் மகாத்மா காந்தி உள் விளையாட்டு அரங்கில், 14வது தேசிய ஓப்பன் டேக்வாண்டோ விளையாட்டுப் போட்டிகள் கடந்த மாதம் 26ம் தேதி முதல் 28ம் தேதி வரை 3 நாட்கள் நடந்தது. இப்போட்டியில், 2,000க்கும் மேற்பட்ட மாணவ, மாணவிகள் கலந்து கொண்டனர். இதில், கிருஷ்ணகிரி மாவட்ட விளையாட்டரங்கில், தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் சார்பில், பயிற்சி பெற்று வரும் மாணவ, மாணவியர் 26 பேர் கலந்து கொண்டனர். போட்டியில், 10 பேர் தங்க பதக்கமும், 6 பேர் வெள்ளிப் பதக்கமும், 10 பேர் வெண்கல பதக்கமும் வென்று சாதனை படைத்துள்ளனர். பதக்கங்களை வென்ற மாணவ, மாணவிகளை கிருஷ்ணகிரி மாவட்ட விளையாட்டு அலுவலர் நடராஜ முருகன், பாராட்டி பதக்கங்களை அணிவித்தார். இந்நிகழ்ச்சியில், விளையாட்டு மேம்பாட்டு ஆணைய டேக்வாண்டோ பயிற்சியாளர் சங்கர், சுவாமி விவேகானந்தா மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி முதல்வர் நந்தினி உள்பட பலர் கலந்து கொண்டனர்.





■ தேனி மாவட்டம், பெரியகுளம் நகராட்சி வராகநதியில் தண்டுபாளையம் பாலத்திலிருந்து குப்பைகள் கொட்டுவதை தடுக்க நகராட்சி நிர்வாகம் சார்பில் அமைக்கப்பட்டிருந்த தடுப்பு கம்பிகள் மீது பிளக்ஸ் பேனர்கள் கட்டி சேதப்படுத்துவதாக வரப்பெற்ற புகாரின் அடிப்படையில், மாவட்ட ஆட்சித்தலைவர் மரு.இரா.வைத்திநாதன், உத்தரவின்படி, பெரியகுளம் நகராட்சி நிர்வாகம் மூலம் தண்டுபாளையம் பாலத்தில் வைக்கப்பட்டிருந்த பிளக்ஸ் பேனர் முழுமையாக அகற்றப்பட்டுள்ளது. மேலும்,பொதுமக்களின் பயன்பாட்டிற்காகஅமைக்கப்பட்டுள்ள பொதுசொத்துகளை சேதப்படுத்தாமல் பாதுகாக்கவும், குப்பைகள் கொட்டப்படுவதைத் தடுக்கும் நடவடிக்கைகளுக்கு பொதுமக்கள் முழு ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என நகராட்சி நிர்வாகம் சார்பில் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.




## சிறப்பு மனு முகாம் மூலம் பொதுமக்களின் குறைகளை கேட்டறிந்து புகார் மனு மீது துரித நடவடிக்கை எடுத்து வரும் தேனி மாவட்ட காவல்துறையினர்

தேனி, ஜூலை.3-

தேனி மாவட்ட காவல் கண்காணிப்பாளர்.K.S.பிரவீன் கௌதம், உத்தரவின் பேரில் தேனி மாவட்டத்தில் உள்ள அனைத்து காவல் நிலைய எல்லைக்குட்பட்ட பகுதியில் காவல் அதிகாரிகள் சிறப்பு மனு முகாம் நடத்தப்பட்டு பொதுமக்களின் குறைகளை கேட்டறிந்து புகார் மனு மீது உரிய விசாரணை செய்து துரித நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர்.சிறப்பு மனு முகாம் நடத்தப்பட்டு பொதுமக்களின் குறைகளை கேட்டறிந்து புகார் மனு மீது உரிய விசாரணை செய்து நடவடிக்கை எடுத்து வரும் தேனி மாவட்ட காவல்துறையினரின் செயல் பொதுமக்கள் மத்தியில் காவல்துறை நண்பனாகவும், நம்பிக்கையையும் ஏற்படுத்தி இருப்பதாக பொதுமக்கள் தங்கள் நெஞ்சார்ந்த நன்றியை தெரிவித்து வருகின்றனர்.



■ கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் இன மக்கள் பாதுகாப்பிற்கான வன்கொடுமை தடுப்பு சட்டம் குறித்த விழிப்புணர்வு கண்காணிப்பு மற்றும் நலக்குழு கூட்டம் மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அலுவலர் (பொறுப்பு) அமீர்பாஷா, பர்கூர் சட்டமன்ற உறுப்பினர் இ.சி.கோவிந்தராஜன் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது. உடன் துணை காவல் கண்காணிப்பாளர்கள், தனி வட்டாட்சியர் சின்னசாமி, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் விழிப்புணர்வு மற்றும் கண்காணிப்புக்குழு உறுப்பினர்கள், துறை சார்ந்த அலுவலர்கள் உள்ளனர்.



## 2 டன் அமோனியா வாயு அகற்றப்படும்: திருவள்ளூர் மாவட்ட ஆட்சியர்

திருவள்ளூர், ஜூலை.3-

பெரியபாளையம் இறால் ஆலையில் 2 டன் அமோனியா வாயு டேங்கர் லாரி மூலம் 2 நாளில் அகற்றப்படும் என்று திருவள்ளூர் மாவட்ட ஆட்சியர் கூறியுள்ளார். மக்களுக்கு தகவல் தெரிவிக்கப்பட்டு அமோனியா வாயு பாதுகாப்பாக அகற்றப்படும் என்று அவர் தெரிவித்துள்ளார். ஆலையில் இருந்து 400 டன் இறால்கள் இதுவரை அப்புறப்படுத்தப்பட்டுள்ளதாகவும் கூறியுள்ளார்



## மருத்துவர்கள் தினம்: காவேரிப்பட்டினம் அரசு மருத்துவமனையில் சிறப்பாக கொண்டாட்டம்

கிருஷ்ணகிரி, ஜூலை.3-

தேசிய மருத்துவர்கள் தினத்தை முன்னிட்டு, கிருஷ்ணகிரி மாவட்டம் காவேரிப்பட்டினம் அரசு மருத்துவமனையில் மருத்துவர்கள் தின விழா சிறப்பாக நடைபெற்றது.

நிகழ்ச்சிக்கு வட்டார மருத்துவ அலுவலர் நித்யா தலைமையில்,மருத்துவமனையின் மருத்துவர் டாக்டர் சோமசுந்தரம் முன்னிலை வகித்தார். விழாவில் மருத்துவர்கள், செவிலியர்கள், மருத்துவப் பணியாளர்கள் மற்றும் அலுவலக ஊழியர்கள் திரளாக கலந்து கொண்டு மருத்துவர்கள் தினத்தை கேக் வெட்டி கொண்டாடினர். நிகழ்ச்சியில் பேசிய வட்டார மருத்துவ அலுவலர் நித்யா, மருத்துவப் பணியை சேவையாகக் கருதி, நோயாளிகளுக்கு தரமான மற்றும் மனிதநேயத்துடன் கூடிய சிகிச்சையை வழங்க அனைவரும் தொடர்ந்து அர்ப்பணிப்புடன் செயல்பட வேண்டும் என்று வலியுறுத்தினார். மேலும், மருத்துவத் துறையில் பணியாற்றும் அனைத்து மருத்துவர்கள் மற்றும் சுகாதாரப் பணியாளர்களின் அர்ப்பணிப்பையும் பாராட்டினார்.இந்நிகழ்ச்சி மருத்துவர்கள், செவிலியர்கள் மற்றும் மருத்துவமனை ஊழியர்களிடையே ஒற்றுமையையும், சேவை மனப்பான்மையையும் வெளிப்படுத்தும் வகையில் உற்சாகமாக நடைபெற்றது. நிகழ்வின் நிறைவில் அனைவரும் மருத்துவர்கள் தின வாழ்த்துகளை பரிமாறிக் கொண்டனர்.

## காணாமல் போன வக்பு வாரியத்திற்கு சொந்தமான சுமார் 500 கோடி ரூபாய் சொத்துக்களை மீட்டெடுக்க அறவழி உண்ணாவிரதப் போராட்டம்



திருப்பத்தூர், ஜூலை.3-

திருப்பத்தூர் மாவட்டம் திருப்பத்தூர் சுற்றுவட்டார பகுதிகளில் ஜாமியா மசூதி, லப்பை பூரா மசூதி உள்ளிட்ட 12 மசூதிகள் மற்றும் இரண்டு அறக்கட்டளைகளுககு சொந்தமாக சுமார் 200 ஏக்கருக்கும் மேலான சொத்துக்கள் உள்ள நிலையில் இந்த சொத்துக்களை முன்னாள் மற்றும் இந்நாள் முத்தவல்லிகள் வக்ஃபு வாரியத்திற்கு உரிய சட்ட திட்டங்களுக்கு உட்பட்டு சொத்துக்களை பராமரித்து வந்ததாக கூறப்பட்டது.

ஆனால் உண்மையில் வக்ஃபு வாரியத்திற்கு சொந்தமாக இருந்த சுமார் 500 கோடி ரூபாய் மதிப்பிலான சொத்துக்கள் வக்பு வாரிய நிர்வாகிகளான முன்னாள் இந்நாள் முத்தவல்லிகள் முறைகேடாக விற்பனை செய்து தகவலை அறிந்த சமூக ஆர்வம் கொண்ட இஸ்லாமியர்கள் முறைகேடு செய்வதற்கான ஆதாரங்களை மூட்டை மூட்டையாக சேகரித்து பல்வேறு துறை சார்ந்த அதிகாரிகளிடம் புகார் மனுக்களை அளித்தும் நடவடிக்கை இல்லாத நிலையில்... இன்று திருப்பத்தூர் அடுத்த ஆசிரிய நகர் பேருந்து நிறுத்தம் அருகே முறைகேடு செய்த ஆவணங்களை பேனர்களாக தயாரித்து மூட்டை மூட்டையாக ஆவணங்களை அடுக்கி உயர் நீதிமன்றத்தில் அனுமதி பெற்று அறவழி உண்ணாவிரத போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இது குறித்து அவர்கள் கூறுகையில் அத்திப்பட்டு கிராமம் காணாமல் போவது போல் திரைப்படத்தில் வரும் காட்சியை மிஞ்சும் அளவிற்கு 500 கோடி ரூபாய் மதிப்பிலான சொத்துக்கள் காணாமல் போனது வேதனை அளிக்கிறது இந்த சொத்துக்கள் எல்லாம் ஏழை எளிய இஸ்லாமியர்களுக்கு பயன்படக்கூடிய சொத்துக்கள் எனவே முறைகேடு செய்யப்பட்ட சொத்துக்களை மீட்டு கொடுக்க வேண்டும் எனவும் தற்போது உள்ள முத்த வல்லிகள் பதவி விலக வேண்டும் எனவும் கோரிக்கை வைத்தனர்.



## செங்குன்றம் (நாரவாரிக்குப்பம்) பேரூராட்சி முன்னாள் துணைத்தலைவர் அ.கதிர்வேலன் 96வது பிறந்தநாளை முன்னிட்டு பொதுமக்களுக்கு அன்னதானம்

மாதவரம், ஜூலை.3-
மாதவரம் தொகுதி செங்குன்றம் நாரவாரிக்குப்பம் பேரூராட்சி முன்னாள் துணைத்தலைவரும் காங்கிரஸ் கட்சியின் நிர்வாகியும் லயன்ஸ் சங்கத்தின் முன்னாள் தலைவருமான மறைந்த அ.கதிர்வேலன் 96 வது பிறந்த நாளை முன்னிட்டு மகேந்திரன், பார்த்திபன், காமராஜ், விஷ்வேஸ்வரன் ஆகியோர் குடும்பத்தினர் சார்பில் ஏழை எளியமக்களுக்கு அன்னதானம் வழங்கும் நிகழ்ச்சி செங்குன்றம் திருவிக தெருவில் அமைந்துள்ள அவரது இல்லத்தில் நடைபெற்றது. நிகழ்ச்சிக்கு சிறப்பு அழைப்பாளர்களாக செங்குன்றம் லயன்ஸ் சங்கத் தலைவர் நந்தகுமார், செயலாளர் இளங்கோ, பொருளாளர் சேகர், வட்டாரத் தலைவர் பவானிசங்கர், மாவட்டத் தலைவர்கள் இரா.ஏ.பாபு, சந்திரசேகர் மற்றும் நிர்வாகிகள் பாலாஜி, கோபி ஆகியோர் உள்ளிட்டோர் கலந்து கொண்டு அன்னதானத்தை துவக்கி வைத்தனர். இதில் அ.கதிர்வேலன் குடும்பத்தினர்கள், பொதுமக்கள் திரளாக கலந்துகொண்டனர்.

## காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட திமுக மாணவர் அணி சார்பில் கண்டன ஆர்ப்பாட்டம் தாம்பரத்தில் நடைபெற்றது




தாம்பரம், ஜூலை.3-
செங்கல்பட்டு மாவட்டம் தாம்பரத்தில் தமிழக மனிதவளத்துறை அமைச்சர் சரத்குமார் போதைப்பொருள் பயன் படுத்திய விவகாரத்தைக் கண்டித்து, தாம்பரம் சண்முகா சாலையில் காஞ் சிபுரம் வடக்கு மாவட்ட திமுக மாணவரணி சார்பில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இதில் முன்னாள் அமைச்சருமான தா.மோ. அன்பரசன் தலைமையில் திரண்ட திமுகவினருக்கு, காவல்துறை அனுமதி மறுத்ததால் அங்கு கடும் வாக்குவாதமும் பரபரப்பும் நிலவியது

போராட்டத்தில் ஈடுபட்ட முன்னாள் எம்.எல்.ஏக்கள் எஸ்.ஆர்.ராஜா, இ.கருணாநிதி, தாம்பரம் மேயர் வசந்தகுமாரி, துணை மேயர் காமராஜ், மண்டல குழு தலைவர்கள் டி.காமராஜ், எஸ்.இந்திரன், வே.கருணாநிதி, இ.ஜோசப் அண்ணாதுரை, ஒன்றிய செயலாளர்கள் லோகநாதன், இதயவர்மன், மூவரசப்பட்டு ஜி.கே ரவி, மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் கோல்டு பிரகாஷ், மாணவரணி அமைப்பாளர் பேராசிரியர் எல்.பிரபு, காஞ் சிபுரம் வடக்கு மாவட்ட நிர்வாகிகள் இளைஞர் அணி மாணவர் அணி மகளிர் அணி உள்ளிட்ட 500க்கும் மேற்பட்டோரை காவல்துறையினர் அதிரடியாகக் கைது செய்து, அருகில் உள்ள திருமண மண்டபத்தில் அடைத்தனர். அங்கு, திமுக மகளிர் அணியினர் தவெக அமைச்சரைக் கிண்டல் செய்யும் விதமாக, மொபைல் போன் மீது மாத்திரைகளை வைத்து ஏடிஎம் கார்டால் நசுக்கி, டிரக் உனக்கு டேப்லெட்டா? கொக்கைன் உனக்கு சாக்லேட்டா?என வினோத கோஷங்களை எழுப்பி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்தொடர்ந்து செய்தியாளர்களைச் சந்தித்த திமுக மாணவரணி செயலாளர் வீரமணி, போதைப்பொருள் பயன்படுத்திய அமைச்சரை முதல்வர் ஏன் இன்னும் பதவி நீக்கம் செய்யவில்லை திமுக தாய்க்கழகம் களத்தில் இறங்கினால், இந்த தவெக அரசு ஒரு நாள்கூட நீடிக்காது என ஆவேசமாகத் தெரிவித்தார். அவரைத் தொடர்ந்து பேசிய முன்னாள் அமைச்சர் தா.மோ.அன்பரசன், மக்களுக்காகப் போராடி சிறை சென்ற பாரம்பரியம் திமுகவிற்கு உண்டு ஆனால் கில்லி படத்தை எத்தனை முறை பார்த்தார், பால் அபிஷேகம் செய்தார் என்பதுதான் கில்லி சரத்தின் வரலாறு என விமர்சித்தார். இதற்கிடையே, திருமண மண்டபத்தில் கைது செய்து வைக்கப்பட்டிருந்த திமுகவினரை, கட்சியின் பொருளாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான டி.ஆர்.பாலு நேரில் சந்தித்து ஆதரவு தெரிவித்தார். அமைச்சரின் விவகாரத்தால் தாம்பரம் பகுதியில் பரபரப்பு காணப்பட்டது

## தெலங்கானாவில் 'புஷ்பா' பட பாணியில் கடத்த முயன்ற ரூ.2.62 கோடி கஞ்சா பறிமுதல்



ஹதராபாத், ஜூலை.3-
புஷ்பா திரைப்படப் பாணியில் தெலங்கானாவில் ரூ.2.62 கோடி மதிப்பிலான 525 கிலோ கஞ்சா கண்டெய்னர் லாரியுடன் பிடிபட்டது.

தெலங்கானா மாநிலம், பத்ராத்ரி கொத்தகூடம் மாவட்டம், சாரபாக்கா எனும் இடத்தில் "ஈகல்' அதிரடிப்படை மற்றும் போலீஸார் தீவிர வாகன சோதனையில் ஈடுபட்டனர். அப்போது அவ்வழியாக சென்ற கண்டெய்னர் லாரியை சந்தேகத்தின் பேரில் போலீஸார் சோதனையிட்டனர். அப்போது, அதில் 'புஷ்பா' திரைப்படப் பாணியில் கண்டெய்னர் லாரிக்குள் 2 அடுக்கு இரும் புத்திரை அமைத்து, அதற்குள் 525 கிலோ எடையுள்ள கஞ்சா பொட்டலங்களை மறைத்து கடத்தி செல்வது தெரியவந்தது. உடனே அந்த லாரியையும், அதில் இருந்தவர்களையும் கைது செய்து விசாரணை நடத்தினர்.ஒடிஷாவை சேர்ந்த சஹதேவ் பாண்டில் என்பவர், அந்த மாநிலத்தில் உள்ள அல்லூரி கோட்டை வனப்பகுதியில் கூலி ஆட்களை வைத்து கஞ்சாவை சட்ட விரோதமாக பறித்துள்ளார். இதனை அதே கூலி ஆட்களை வைத்து ஆந்திர மாநிலம், துலசி பாக்காவுக்கு அனுப்பி வைத்துள்ளார். அங்கிருந்து இவை புஷ்பா கண்டெய்னர் மூலம் உத்தர பிரதேச மாநிலத்துக்கு கடத்தும் பணிகள் நடந்தன.இது பத்ராசலம், கம்மம், வாரங்கல், ஆதிலாபாத் வழி யாக உத்தர பிரதேசத்துக்கு கடத்த திட்டமிடப்பட்டது விசாரணையில் தெரிய வந்துள்ளது. இந்நிலையில், கொத்தகூடம் போலீஸாருக்கு கிடைத்த ரகசிய தகவலால் இந்த வாகனம் சோதனை செய்யப்பட்டு, 525 கிலோ கஞ்சாவுடன் பறிமுதல் செய்யப்பட்டது. மேலும், இந்த வாகனத்துக்கு எஸ்கார்ட் போல் முன்னால் வந்த ஒரு பைக் மற்றும் 5 செல்போன்களும் பறிமுதல் செய்யப்பட்டன.

இது தொடர்பாக சஹதேவ் பாண்டில், ஆந்திராவைச் சேர்ந்த திரிநாத், உத்தர பிரதேசத்தைச் சேர்ந்த லாரி ஓட்டுநர் குல்தீப் ஷர்மா உட்பட ஒரு சிறுவனையும் போலீஸார் பிடித்து விசாரித்து வருகின்றனர் தலைமறைவாக உள்ள மேலும் சிலரையும் தேடி வருவதாக போலீஸார் தெரிவித்துள்ளனர்.

## மதுரை எய்ம்ஸ் மருத்துவமனையை திறக்கக் கோரிய மனு: ஐகோர்ட் கிளை தள்ளுபடி



மதுரை, ஜூலை.3-
மதுரை எய்ம்ஸ் மருத்துவமனையை உடனடியாக திறக்கக் கோரிய மனுவை உயர் நீதிமன்றம் தள்ளுபடி செய்தது.மதுரையைச் சேர்ந்த கேகே ரமேஷ் உயர் நீதிமன்ற மதுரை அமர்வில் தாக்கல் செய்த மனுவில், "தமிழகத்தில் எய்ம்ஸ் மருத்துவமனை அமைக்கப்படும் என 2015 ம் ஆண்டு மத்திய அரசு அறிவித்தத்து. பின்னர் 2018 ம் ஆண்டு, 45 மாதங்களில் எய்ம்ஸ் மருத்துவமனை கட்டுமானப் பணிகள் முடிக்கப்படும் என அரசுத் தரப்பில் கூறப்பட்டது. பின்னர் 2021ல், 36 மாதங்களில் முடிக்கப்பட்டு 2026 ஜனவரி மாதம் ஒப்படைக்கப்படும் என உறுதியளிக்கப்பட்டது. ஆனால் இதுவரை பயன்பாட்டிற்கு கொண்டு வரப்படவில்லைஎனவே, மதுரை தோப்பூரில் அமைந்துள்ள எய்ம்ஸ் மருத்துவமனையை உடனடியாக திறந்து பயன் பாட்டிற்கு கொண்டு வரவும், இந்த விவகாரத்தில் தவறான உறுதியை அளிக்கும் அரசு அலுவலர்களுக்கு அபராதம் விதிக்கவும் உத்தரவிட வேண்டும்." என்று கூறியிருந்தார்.இந்த மனுவை நீதிபதிகள் கார்த்திகேயன், சக்திவேல் அமர்வு விசாரித்தது. பின்னர் நீதிபதிகள், "மனுதாரர் ஒரே கோரிக்கைக்காக மீண்டும், மீண்டும் நீதிமன்றத்தை அணுகுவதை வழக்கமாகக் கொண்டிருக்கிறார். எய்ம்ஸ் மருத்துவமனை கட்டுமானப் பணிகளை முடித்து, நிர்வாகப் பணிகள் மற்றும் பிற பணிகளுக்கான அனைத்து தேவைகளையும் முடித்து பயன்பாட்டிற்கு கொண்டு வருவது என்பது ஒரு நீண்ட கால நடைமுறை என்பதை மனுதாரர் புரிந்து கொள்ள வேண்டும். ஏற்கனவே அவருக்கு உயர் நீதிமன்றம் ரூ.50,000 அபராதம் விதித்து உச்சநீதிமன்றம் ரூ.5000 மாக குறைத்துள்ளது. மனு தள்ளுபடி செய்யப்படுகிறது," என உத்தரவிட்டனர்.



■ மதுரை மாவட்டத்தில் பல்வேறு நிகழ்வுகளில் கலந்து கொள்ளவதற்காக வருகை தந்த தமிழ்நாடு ஆளுநர்ராஜேந்திர விஸ்வநாத் அர்லேகரை மாவட்ட ஆட்சித்தலைவர் நிஷாந்த் கிருஷ்ணா விமான நிலையத்தில் பூங்கொத்து கொடுத்து வரவேற்றார்.




■ கிருஷ்ணகிரி ஊராட்சி ஒன்றியம், குருபரப்பள்ளி ஊராட்சி, போடரபள்ளி கிராமத்தில், தேசிய கால்நடை நோய் தடுப்புத் திட்டத்தின் கீழ், 9 வது சுற்று கோமாரி நோய் தடுப்பூசி முகாமை கால்நடை பராமரிப்புத்துறை மண்டல இணை இயக்குநர் மரு.மோகன் குமார் மற்றும் கிருஷ்ணகிரி சட்டமன்ற உறுப்பினர் பா.முகுந்தன் ஆகியோர் துவக்கி வைத்து, கால்நடை வளர்ப்போருக்கு தாது உப்பு கலவைகளை வழங்கினார்கள். உடன், ஆவின் பொது மேலாளர் சிவக்குமார், உதவி இயக்குநர்கள் மரு.மகேந்திரன், மரு.ரவிச்சந்திரன் உள்ளிட்ட பலர் உள்ளனர்.

## திமுக குதிரை பேரத்தை முன்னெடுத்ததாக நிர்மல்குமார் வடிகட்டிய பொய்யை தெரிவித்துள்ளார்: பரந்தாமன்

சென்னை, ஜூலை.3-
தவெக அரசுதான் குதிரை பேரத்தில் ஈடுபட்டு வருகிறது. திமுக மீது பழி போடவும் குற்றம் சுமத்தவும் திமுக மீது போலியான குற்றச்சாட்டு கூறுகின்றனர். திமுக முன்னாள் அமைச்சரை தொடர்புபடுத்தி குதிரை பேரம் நடத்துவதாக நாடகம் நடத்துகின்றனர். எடப்பாடியை சந்திக்காமல், அதிமுக அதிருப்தி அணியை விஜய் சந்தித்ததுதான் குதிரை பேரம். அதிமுகவில் ஒவ்வொருவராக பதவி விலகி தவெகவில் இணைவதுதான் குதிரை பேரம். விஜயின் குதிரை பேர அரசியலை மக்கள் பார்த்துக் கொண்டிருக்கின்றனர். திமுக அளித்த குதிரை பேர புகாரின் அடிப்படையில் விஜய்தான் நம்பர் ஒன் குற்றவாளி.Rail Freight

தவெக ஆட்சியை கவிழ்க்க சதி என்று ஒரு நகைச்சுவையை அரங்கேற்றுகின்றனர். நிர்வாகத் திறனற்ற ஆட்சி அவலங்களை மறைக்க திமுக மீது பழி சுமத்துகின்றனர். பிளாக் டிக்கெட் விற்றவர்கள் எல்லாம் இன்று அமைச்சர்களாக வந்துள்ளனர். இது விஜய் சர்க்கார் அல்ல ; குதிரை பேர சர்க்கார் என்பதைதே காட்டுகிறது. திமுக புகாரில் நடவடிக்கை எடுக்காவிடில் உயர்நீதிமன்றம் சென்று சட்ட ரீதியாக சந்திப்போம்

## சைவம், வைணவம் குறித்த சர்ச்சை கருத்து வழக்கை ரத்து செய்யக் கோரிய பொன்முடி மனு தள்ளுபடி



சென்னை, ஜூலை.3-
சைவ, வைணவ சமயங்கள் மற்றும் பெண்கள் குறித்து சர்ச்சை கருத்து தெரிவித்தது தொடர்பான வழக்கை ரத்து செய்யக் கோரி திமுக முன்னாள் அமைச்சர் பொன்முடி தாக்கல் செய்த வழக்கை தள்ளுபடி செய்து சென்னை உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. சென்னையில் 2025 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் நடந்த நிகழ்ச்சி ஒன்றில் பேசிய முன்னாள் அமைச்சர் க.பொன்முடி, சைவ, வைணவ சமயங்கள் குறித்தும், பெண்கள் குறித்தும் சர்ச்சைக்குரிய வகையில் பேசியிருந்தார்.

இது தொடர்பாக சென்னை மாநகராட்சி கவுன்சிலர் உமா ஆனந்தன், சைதாப்பேட்டை மாஜிஸ்திரேட் நீதிமன்றத்தில் தனிநபர் புகார் மனுவை தாக்கல் செய்துள்ளார். அந்த மனுவில், வெறுப்பு பேச்சு பேசிய முன்னாள் அமைச்சர் பொன்முடிக்கு எதிரான இந்தப் புகாரை விசாரித்து, மத ரீதியாக வெறுப்புணர்வை ஏற்படுத்துதல், மத உணர்வுகளை புண்படுத்துதல் ஆகிய பிரிவுகளின் கீழ் அவரை தண்டிக்க வேண்டும் என கோரப்பட்டுள்ளது.இந்தப் புகார் மனு, எம்.பி எம்.எல்.ஏ.க்கள் மீதான வழக்குகளை விசாரிக்க நியமிக்கப்பட்டுள்ள சிறப்பு நீதிமன்றமான ஜார்ஜ் டவுன் மாஜிஸ்திரேட் நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது. தனக்கு எதிரான புகாரை விசாரணைக்கு ஏற்று ஜார்ஜ் டவுன் நீதிமன்றம் பிறப்பித்த உத்தரவை ரத்து செய்யக் கோரி பொன்முடி தரப்பில் சென்னை உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

இந்த வழக்கு நீதிபதி ஜி.கே.இளந்திரையன் முன்பு விசாரணைக்கு வந்தபோது பொன்முடி தரப்பில், 'மூடிய அரங்கில் நடைபெற்ற நிகழ்ச்சியில் பேசிய பேச்சு தொடர்பாக அளிக்கப்பட்ட தனி நபர் புகார் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இந்த வழக்கை தாக்கல் செய்யும் முன் அரசின் அனுமதியை பெறவில்லை என்பதால், இந்த வழக்கை தொடர்ந்து நடத்த முடியாது' என வாதிடப்பட்டது.

புகார்தாரரான உமா ஆனந்தன் தரப்பில், 'தனது பேச்சு ஊடகங்களில் பரவும், பிற மதத்தினர் பார்ப்பார்கள் என்று தெரிந்தே பொன்முடி இந்த வெறுப்பு பேச்சை பேசியுள்ளார்.இதே விவகாரத்தில் சென்னை உயர் நீதிமன்றம் தாமாக முன்வந்து வழக்கை விசாரணைக்கு எடுத்து, பொன்முடிக்கு எதிராக வழக்குப் பதிவு செய்ய உத்தரவிட்டிருந்த நிலையில், பொன்முடியின் பேச்சால் பொது அமைதிக்கு எந்த குந்தகமும் ஏற்படவில்லை என கூறி, புகார்கள் முடித்துவைக்கப்பட்டன. தற்போது பொன்முடிக்கு எதிராக வழக்குத் தொடர அரசிடம் அனுமதி கோரப்பட்டுள்ளது' என்று வாதிடப்பட்டது.இரு தரப்பு வாதங்களையும் கேட்ட நீதிபதி, வழக்கை ரத்து செய்யக் கோரிய பொன்முடியின் மனு மீதான தீர்ப்பை தேதி குறிப்பிடாமல் தள்ளிவைத்திருந்தார்.இந்த வழக்கில் இன்று தீர்ப்பளித்த நீதிபதி ஜி.கே. இளந்திரையன், திமுக முன்னாள் அமைச்சர் பொன்முடியின் வழக்கை தள்ளுபடி செய்து உத்தரவிட்டுள்ளார்.

## விக்சித் பாரத் கிராமப்புற வேலை வாய்ப்பு மற்றும் வாழ்வாதார உத்தரவாத இயக்கம் திட்டத்தின் செயல்பாட்டுப் பணிகளை மாவட்ட ஆட்சித் தலைவர் ஆய்வு



இலட்சுமிபுரம், ஜூலை.3-
தேனி மாவட்டம், பெரியகுளம் ஊராட்சி ஒன்றியம், இலட்சுமிபுரம் ஊராட்சியில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை மூலம் விக்சித் பாரத் கிராமப்புற வேலை வாய்ப்பு மற்றும் வாழ்வாதார உத்தரவாத இயக்கம் திட்டத்தின் செயல்பாட்டுப் பணிகளை மாவட்ட ஆட்சித் தலைவர் மரு.இரா.வைத்திநாதன்,மற்றும் பெரியகுளம் சட்டமன்ற உறுப்பினர் க.சபரி ஐங்கரன் ஆகியோர் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தனர்.

இத்திட்டமானது மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின் கீழ் 100 நாள் வேலை நாட்களை 125 நாட்களாக மாற்றி புதிதாக அமைக்கப்பட்ட விக்சித் பாரத் கிராமப்புற வேலைவாய்ப்பு மற்றும் வாழ்வாதார இயக்கம் துவக்கப்பட்டு இன்றுமுதல் இத்திட்டம் ஊராட்சிப் பகுதிகளில் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்தின் மூலம் 318 பணிகள் உருவாக்கப்பட்டு, ஊராட்சியின் வளர்ச்சிக்கு தேவையான திட்டங்களை அப்பகுதி மக்களே தேர்வுசெய்து, பணிகளை முடித்து தன்னிறைவு பெற்ற ஊராட்சியாக திகழும் வகையில் செயல்படுத்தப்பட உள்ளது. இத்திட்டத்திற்கு 60% மத்திய அரசு நிதியும், 40% மாநில அரசு நிதியும் பங்களிப்பு நிதியாக வழங்கப்படவுள்ளது. இத்திட்டத்தின் மூலம் 2047ஆம் ஆண்டிற்குள் அனைத்து ஊராட்சிகளும் முழுமையான வளர்ச்சிப் பெற்று வளர்ந்த பாரதமாக அமைந்திட வேண்டும் என்பதே இத்திட்டத்தின் முழுமையான நோக்கமாகும். மேலும், இத்திட்டத்தி ல்பணிக் காலங்களில் விவசாயப் பணிகள் பாதிக்காத வகையில் 60 நாட்கள் விடுமுறை காலமாக அறிவிக்கப்பட்டுள்ளது. இதன்மூலம் விவசாயப் பணிகள் எந்த வகையிலும் பாதிப்பு ஏற்படாது. அதேபோல், ஊராட்சிப் பகுதிகளில் நடைபெறும் வளர்ச்சித் திட்டப் பணிகள் முழுக்க முழுக்க அப்பகுதி மக்களை வைத்து செயல்படுத்தப்படும். ஒப்பந்ததாரர்களின் பணி முற்றிலும் தடுக்கப்படுகிறது. இதனால் கிராமப் பகுதிகளில் உள்ள தனி நபர் களின் பொருளாதார வளர்ச்சிக்கு இத்திட்டம் மிகப்பயனுள்ளதாக இருப்பதுடன் ஊராட்சியின் வளர்ச்சியையும் முழுமை பெறும் திட்டமாக அமைந்திட உள்ளது என தெரிவித்தார்கள். அதனை த்தொடர்ந்து மாவட்டஆட்சித்தலைவர் , பெரியகுளம் சட்டமன்ற உறுப்பினர் அப்பகுதி மக்களிடம் இத்திட்டத்தின் மூலம் உங்கள் ஊராட்சிக்கு தேவையானப் பணிகளை மேற்கொண்டு பயன்பெற்றிட வேண்டும் என தெரிவித்தார்கள். இந்நிகழ்வில் கூடுதல் ஆட்சியர் (வளர்ச்சி) .ரஜத் பீடன் ., வட்டார வளர்ச்சி அலுவலர்கள் புவனேஸ்வரி, .ஜெகதீசன் மற்றும் அரசு அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

# பாலாற்று தடுப்பணைத் திட்டம்: முறைப்படி டெண்டர் விடப்பட்ட திட்டத்தை இப்போது எதிர்ப்பது நியாயமா?



மதுரை, ஜூலை.3-

மதுரை மாவட்டம் மேலூர் தாலுகாவிற்கு உட்பட்ட பள்ளப்பட்டி கிராமத்தில், பாலாற்றின் குறுக்கே தடுப்பணை கட்டுவதற்கான பணிகள் நீண்ட காலத் திட்டமிடலுக்குப் பிறகு தொடங்கப்பட்டுள்ளன. தமிழக அரசின் நீர்வளத் துறையின் கீழ், மதுரை மண்டல கண்காணிப்புப் பொறியாளர் அலுவலகம் மூலம் இந்தத் திட்டத்திற்கான டெண்டர் (NIT No. 03/ D4/C.250/2025) கடந்த 2025ஆம் ஆண்டு ஆகஸ்ட் 8ஆம் தேதியே வெளியிடப்பட்டது,.

சுமார் 9.50 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கொட்டாம்பட்டி ஒன்றியம் சூரப்பட்டியில் இந்தத் தடுப்பணையை அமைக்க அரசாணை வெளியிடப்பட்டு, ஓராண்டு காலம் கடந்துள்ள நிலையில், தற்போது இத்திட்டத்திற்குத் திடீரென எதிர்ப்புத் தெரிவிப்பது வளர்ச்சிப் பணிகளைத் தாமதப்படுத்தும் செயலாகவே பார்க்கப்படுகிறது.

முறையான அரசாணையும் நீண்ட காலத் திட்டமிடலும் இந்தத் தடுப்பணைத் திட்டமானது முறையான ஆய்வு மற்றும் தொழில்நுட்பக் காரணங்களின் அடிப்படையிலேயே அரசாணையாக வெளியிடப்பட்டது. 2025 ஆகஸ்ட் மாதத்தில் இதற்கான டெண்டர் பணிகள் தொடங்கப்பட்டு, ஒப்பந்ததாரர்கள் விண்ணப்பிக்க ஆகஸ்ட் 28 வரை கால அவகாசம் வழங்கப்பட்டது. இத்தனை நடைமுறைகள் முடிந்து, திட்டம் செயல்பாட்டிற்கு வரும் நிலையில், இப்போது பல்வேறு காரணங்களைக் கூறித் தடுப்பணையைத் தடுப்பது முறையல்ல. ஒரு திட்டத்திற்கான அரசாணை வெளியிடப்பட்ட போதே தங்கள் கருத்துக்களைத் தெரிவிக்காமல், பணிகள் தொடங்கும் சூழலில் எதிர்ப்புத் தெரிவிப்பது திட்டத்தின் நோக்கத்தையே கேள்விக்குறியாக்குகிறது.

பாசனப் பகுதியும் அதன் நன்மைகளும் பாலாறு நத்தம் கரந்தமலையில் உற்பத்தியாகி திண்டுக்கல், திருச்சி, மதுரை மாவட்டங்கள் வழியாகச் சென்று சிவகங்கை மாவட்டத்தின் திருப்புத்தூர் பெரிய கண்மாய்க்கு வந்து சேர்கிறது. இந்தத் தடுப்பணை குறிப்பாக மேலூர் மற்றும் கொட்டாம்பட்டி ஒன்றியத்தில் உள்ள விவசாயப் பகுதிகளின் நிலத்தடி நீர் மட்டத்தை உயர்த்தவும், பாசன வசதியை மேம்படுத்தவும் திட்டமிடப்பட்டது,.

தற்போது நிலத்தடி நீர் மட்டம் குறைந்துள்ள நிலையில், இதுபோன்ற தடுப்பணைகள் மழைக்காலங்களில் வீணாகச் செல்லும் நீரைத் தேக்கி வைத்து, அப்பகுதி விவசாயிகளின் வாழ்வாதாரத்தை உயர்த்த உதவும்.

பாதிப்புகள் குறித்த அச்சம் தேவையற்றது தடுப்பணை கட்டப்படுவதால் ஆற்றின் கீழ்மடைப் பகுதிகளுக்கு நீர் செல்வது பாதிக்கப்படும் என்ற அச்சத்தை திருப்புத்தூர் பகுதி விவசாயிகள் முன்வைக்கின்றனர். கடந்த ஜூன் 29, 2026 அன்று நடைபெற்ற சமாதானக் கூட்டத்தில், தடுப்பணையின் உயரத்தை 6 அடியிலிருந்து 3 அடியாகக் குறைக்க வேண்டும் என்று கோரிக்கை விடுக்கப்பட்டது.

இருப்பினும், நிபுணர்களின் கருத்துப்படி: இந்தத் தடுப்பணை நீரைச் சேமித்து நிலத்தடி மட்டத்தை உயர்த்தவே பயன்படும்; இது நீரோட்டத்தை முழுமையாகத் தடுத்துவிடாது.

அதிகப்படியான நீர் வரும்போது அது தானாகவே வழிந்தோடி கீழ்மடைப் பகுதிகளுக்குச் செல்லும் வகையில் தான் பொறியியல் வடிவமைப்பு செய்யப்படுகிறது.

மணல் திருட்டு மற்றும் காடுகள் அழிப்பால் ஏற்கனவே ஆற்றில் நீர் வரத்து குறைந்துள்ள நிலையில், இதுபோன்ற தடுப்பணைகள் மட்டுமே இருக்கும் நீரைச் சிக்கனமாகப் பயன்படுத்த வழிவகை செய்யும்.

எனவே, முறையான டெண்டர் விடப்பட்டு, அரசின் நேரடி கண்காணிப்பில் நடைபெறும் இத்திட்டத்தைத் தடுப்பது அப்பகுதி விவசாயிகளின் நீண்ட கால நலனைப் பாதிக்கும். பாசனப் பகுதிகளுக்கு எந்த ஒரு பாதிப்பும் ஏற்படாத வண்ணம் தொழில்நுட்ப ரீதியாகத் திட்டமிடப்பட்டுள்ள இத்திட்டத்திற்கு அனைவரும் ஒத்துழைப்பு வழங்குவதே இப்பகுதியின் விவசாய வளர்ச்சிக்குச் சிறந்தது.




## இந்தியா-லிபியா கல்வி நிறுவனங்கள் இணைந்து சர்வதேச வடிவியல் கருத்தரங்கம்: 1,000க்கும் மேற்பட்டோர் பங்கேற்பு

மதுரை, ஜூலை.3-

இந்தியா மற்றும் லிபியாவின் பல்கலைக்கழகங்கள் இணைந்து, "வடிவியலில் புதிய கோட்பாடுகள் - இந்தியாவைச் சேர்ந்த ராஜா கிளைமாக்ஸ் அவர்களின் புதிய கண்டுபிடிப்புகள்" என்ற தலைப்பில் வரலாற்றுச் சிறப்புமிக்க சர்வதேச இணையவழி கருத்தரங்கை நடத்தின. இதில் இந்தியா மற்றும் வெளிநாடுகளைச் சேர்ந்த பேராசிரியர்கள், ஆராய்ச்சியாளர்கள், மாணவர்கள் என 1,000க்கும் மேற்பட்டோர் ஆர்வமுடன் பங்கேற்றனர். கருத்தரங்கிற்கு லிபியாவின் வாடி அல்ஷட்டி பல்கலைக்கழக பேராசிரியர் டாக்டர் குஸ்லான் மிஸ்கீன் வரவேற்புரை வழங்கினார். உலகளாவிய ஒருங்கிணைப்பாளர் டாக்டர் ஆர். ரவீந்திரநாத் நேரு கருத்தரங்கின் நோக்கம் மற்றும் முக்கியத்துவத்தை எடுத்துரைத்தார். காமராஜ் கல்லூரி முதல்வர் டாக்டர் பானுமதி தொடக்க உரையாற்றினார். நிகழ்ச்சியில் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்ட பிரபல கணிதவியலாளரும் CEOA கல்வி நிறுவனங்களின் நிறுவனத் தலைவருமான டாக்டர் எம். ராஜா கிளைமாக்ஸ், "21ஆம் நூற்றாண்டின் வடிவியல் கோட்பாடுகள் - சிம்சன் கோடு பற்றிய புதிய கண்டுபிடிப்புகள்" என்ற தலைப்பில் உரையாற்றினார். அவரது விளக்கவுரை பங்கேற்பாளர்களிடையே பெரும் வரவேற்பைப் பெற்றது. கருத்தரங்கில் தமிழ்நாட்டின் பல்வேறு கல்லூரிகள் மற்றும் பள்ளிகளைச் சேர்ந்த மாணவர்கள் உள்ளிட்ட ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் பங்கேற்று பயனடைந்தனர். நிகழ்ச்சிக்கான தொழில்நுட்ப உதவியை மதுமிதா வழங்க, நிறைவில் சுதா நன்றியுரை ஆற்றினார்.

## தென் தமிழகத்தில் முதன்முறை: விலா குருத்தெலும்பால் 16 வயது சிறுவனுக்கு ஒரே கட்டத்தில் காது மறுசீரமைப்பு - மீனாட்சி மிஷன் மருத்துவமனை சாதனை




மதுரை, ஜூலை.3-

தென் தமிழகத்தில் முதன்முறையாக, மைக்ரோடியா (Microtia) என்ற பிறவிக் குறைபாட்டால் இயல்பான காது வளர்ச்சி இல்லாமல் பிறந்த 16 வயது சிறுவனுக்கு, விலா எலும்பின் குருத்தெலும்பைப் பயன்படுத்தி ஒரே கட்ட அறுவை சிகிச்சையில் 3ளி காது மறு சீரமைப்பை வெற்றிகரமாக மேற்கொண்டு மதுரையில் உள்ள மீனாட்சி மிஷன் மருத்துவமனை மற்றும் ஆராய்ச்சி மையம் புதிய மருத்துவச் சாதனையைப் படைத்துள்ளது. பொதுவாக பல கட்டங்களாக மேற்கொள்ளப்படும் இந்த சிக்கலான அறுவை சிகிச்சையை ஒரே அமர்வில் நிறைவு செய்ததால், நோயாளியின் வலி, மருத்துவமனையில் தங்கும் காலம் மற்றும் குணமடையும் காலம் கணிசமாகக் குறைந்துள்ளதாக மருத்துவர்கள் தெரிவித்தனர். இந்த அறுவை சிகிச்சைக்கு ஜப்பானில் சிறப்புப் பயிற்சி பெற்ற காது, மூக்கு, தொண்டை (ணிழிஜி) துறையின் தலைவர் மற்றும் முதுநிலை நிபுணர் டாக்டர் டி.ஆர். நாகேஸ்வரன் தலைமையிலான மருத்துவக் குழு வழிநடத்தியது. இதுகுறித்து டாக்டர் நாகேஸ்வரன் கூறுகையில், "சுமார் 10 ஆயிரம் குழந்தைகளில் ஒருவருக்கு மைக்ரோடியா பாதிப்பு காணப்படுகிறது. நெருங்கிய இரத்த உறவுத் திருமணங்கள் அதிகமாக நடைபெறும் சமூகங்களில் இந்த பாதிப்பு சற்று அதிகமாக உள்ளது. முகத்தில் தெரியும் இந்த குறைபாடு குழந்தைகளுக்கு மனரீதியான பாதிப்பையும் ஏற்படுத்துகிறது. அறுவை சிகிச்சைக்காக நான்கு விலா எலும்புகளில் இருந்து தேவையான அளவு குருத்தெலும்பு மட்டுமே எடுக்கப்பட்டது. இதனால் விலா எலும்பின் வலிமை அல்லது நிலைத்தன்மைக்கு எந்த பாதிப்பும் ஏற்படாது; மிகச்சிறிய தழும்பு மட்டுமே இருக்கும்," என்றார். மேலும், மைக்ரோடியாவால் ஏற்படும் செவித்திறன் குறைபாட்டை ஆரம்பத்திலேயே கண்டறிந்தால், காக்லியர் இம்ப்ளான்ட் உள்ளிட்ட நவீன சிகிச்சைகள் மூலம் கேட்கும் திறனை மீட்டெடுக்க முடியும் என்றும் அவர் தெரிவித்தார். மருத்துவமனை மருத்துவ நிர்வாகி டாக்டர் பி. கண்ணன் கூறுகையில், "தென் தமிழகத்தில் இவ்வளவு சிக்கலான 3ளி காது மறுசீரமைப்பு அறுவை சிகிச்சையை வெற்றிகரமாக மேற்கொண்ட எங்கள் மருத்துவக் குழுவின் திறமையை பெருமையுடன் பாராட்டுகிறோம். இது மருத்துவத் துறையில் குறிப்பிடத்தக்க மைல்கல்லாகும்," என்றார்.

## இந்தியாபாகிஸ்தான் உறவுகளை மேம்படுத்த வேண்டும் ஒன்றிய அரசை வலியுறுத்தும் உமர் அப்துல்லா



ஜம்மு, ஜூலை.3-

ஜம்மு காஷ்மீர் முதலமைச்சர் உமர் அப்துல்லா, அண்டை நாடுகளுடன் நல்லுறவைப் பேணுவது பிராந்திய அமைதிக்கு மிகவும் அவசியம் என்று வலியுறுத்தி உள்ளார். "நண்பர்களை மாற்றலாம், ஆனால்அண்டை வீட்டாரை மாற்ற முடியாது" என்ற மறைந்த முன்னாள் பிரதமர் அடல் பிஹாரி வாஜ்பாயின் புகழ்பெற்ற பொன்மொழியை சுட்டிக்காட்டி இருக்கும் உமர் அப்துல்லா, "இந்தியா பாகிஸ்தான் இடையிலான பதற்றம் கடந்த 30 முதல் 40 ஆண்டுகளாக நீடித்து வருகிறது. கடந்த ஆண்டு பஹல்காமில் நடந்த சம்பவங்களைத் தொடர்ந்து இது மேலும் அதிகரித்தது. இந்திய அரசியல் இப்போது, இரு நாடுகளுக்கும் இடையிலான உறவை மேம்படுத்துவதற்கான வழியை காணுமாறு பிரதமருக்குக் கடிதம் மூலம் கோரிக்கை விடுத்துள்ளோம் என்று கூறினார். மேலும் இரு நாடுகளும் பேச்சுவார்த்தை மூலம் தங்களுக்குள் இருக்கும் பிரச்சினைகளைத் தீர்க்க முன்னுரிமை அளிக்க வேண்டும் என்று ஷோபியானில் செய்தியாளர்களிடம் பேசிய உமர் அப்துல்லா கூறினார். தொடர்ந்து பேசிய உமர் அப்துல்லா சமீபத்தில் இந்தியா மற்றும் பாகிஸ்தான் ஆகியவை ஒன்றோடொன்று பேசி நட்புறவை ஏற்படுத்தி கொள்ள வேண்டும் என்று ஆர்எஸ்எஸ் தலைவர் மோகன் பகவத் கூறியிருந்தார். இதுபோன்ற கருத்தை ஆர்எஸ்எஸ் சொல்லும் போது யாரும் ஆட்சேபிப்பதில்லை, ஆனால் ஜம்மு காஷ்மீரை சேர்ந்த தலைவர்கள் இதைப் பற்றிப் பேசும்போது மட்டும் எதிர்ப்பு எழுகிறது என்று வருத்தத்தை வெளிப்படுத்தினார். அண்டை நாடுகளுக்கு இடையிலான உறவு மேம்பட வேண்டும் என்பதே எங்களின் முக்கிய நோக்கம் என்று மீண்டும் வலியுறுத்தினார்



■ மதுரை மாநகராட்சி குருவிக்காரன் சாலை பகுதியில் தூய்மைப்பணிகள் குறித்து ஆணையாளர் கௌரவ் குமார், இ.ஆ.ப., நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார் அருகில் உதவி ஆட்சியர் பயிற்சி சித்தார்த் போகர்னா, இ.ஆ.ப. சுகாதார அலுவலர் ராஜ்கண்ணன் மற்றும் மாநகராட்சி அலுவலர்கள் ஆகியோர் உடன் உள்ளனர்.

## முதல்வர் விஜய் வெற்றி பெற்ற பெரம்பூரை முன்மாதிரி தொகுதியாக மாற்ற திட்டம்: மாநகராட்சி ஆணையர் ஆய்வு



சென்னை, ஜூலை.3-

முன்மாதிரி தொகுதியாக மாற்றும் வகையில், பெரம்பூரில் மேற்கொள்ள வேண்டிய வளர்ச்சி பணிகள் தொடர்பாக மாநக ராட்சி ஆணையர் ஜி.எஸ். சமீரன் நேரில் ஆய்வு செய்தார். பெரம்பூர் தொகுதியில் 2001, 2006, 2011 ஆகிய சட்டப்பேரவைத் தேர்தல்களில் கூட்டணி கட்சியான மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி வேட்பாளரே தொடர்ந்து வெற்றி பெற்றார். இக்கட்சி, திமுக, அதிமுகவோடு கூட்டணி அமைத்து போட்டியிட்டாலும், அக்கட்சிகள் ஆளுங்கட்சியாக வரும் போது, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி எதிர்க்கட்சியாகவே செயல்பட்டது. 2016ல் அதிமுக ஆட்சியில் அக்கட்சி எம்எல்ஏ வாக இருந்தாலும், குறுகிய காலத்தில் பதவியை இழந்தார். அதன் பின்னர், 2019 இடைத்தேர்தலில் திமுக வேட்பாளர் ஆர்.டி. சேகர் வெற்றி பெற்று, அவரும் எதிர்க்கட்சியாக இருந்தார். 2021ல் தான் பெரம்பூர் தொகுதிக்கு ஆளுங்கட்சி எம்எல்ஏ கிடைத்தார். வளர்ச்சி திட்டங்கள் அதன் மூலம் சில திட்டங்கள் பெரம்பூருக்கு வந்தாலும், 2001 முதல் 2021 வரை சுமார் 20 ஆண்டுகள், பெரம்பூர் தொகுதிக்கு வளர்ச்சி திட்டங்களை எம்எல்ஏக்களால் கொண்டுவர முடியாமல் பின்தங்கியே இருந்தது. இப்போது பெரம்பூர், முதல் வர் தொகுதியாக மாறியுள்ளதால், இத்தொகுதியை முன்மாதிரி தொகுதியாக மாற்ற மாநகராட்சி திட்டமிட்டுள்ளது. விளையாட்டு வளாகம் அதன்படி, இத்தொகுதியில் முத்தமிழ் நகரில் புதிய சமுதாய நலக்கூடம் முல்லை நகர் பகுதியில் தமிழ்நாடு நகர்ப்புற வாழ் விட மேம்பாட்டு வாரிய அடுக்குமாடி குடியிருப்புகள், வடக்கு அவென்யூ சாலையில் நவீன உணவு வளாகம், சத்தியமூர்த்தி நகரில் புதிய பன்னோக்கு மருத்துவமனை, எருக்கஞ்சேரி நெடுஞ்சாலை அருகே கால்பந்து மைதானம், கிரிக்கெட் வலைப் பயிற்சி, இறகுப் பந்து, கைப்பந்து மைதானம் உள்ளிட்ட ஒருங் கிணைந்த விளையாட்டு வளாகம் உள்ளிட்டவைகளை அமைக்க மாநகராட்சி திட்டமிட்டுள்ளது. இதற்காக இப்பகுதிகளில் மாநகராட்சி ஆணை யர் ஜி.எஸ்.சமீரன் நேற்று நேரில் ஆய்வு செய்து, அதி காரிகளுக்கு ஆலோசனை வழங்கினார்.

இந்த ஆய்வின்போது, இணை ஆணையர் (பணிகள்) செ.சரவணன், மத்திய வட்டார ஆணையர் எச்.ஆர்.கவுஷிக், மண்டல அலுவலர் ராஜ்குமார் உள்ளிட்டோர் உடனிருந்தனர்.

## நீட் முதுநிலை தேர்வு ஆக. 30ல் நடக்கிறது




புதுடெல்லி, ஜூலை.3-

தேசிய மருத்துவ அறிவியல் தேர்வு வாரியம் வெளியிட்டுள்ள அறிவிப்பில் கூறியிருப்பதாவது: இந்தியாவில் 2026ம் ஆண்டுக்கான முதுநிலை நீட் தேர்வு ஆகஸ்ட் 30ம் தேதி ஆன்லைன் முறையில் நடக்கிறது. செப்டம்பர் 30ம் தேதி ரிசல்ட் வெளியிடப்படும். இதற்கான விண்ணப்ப பதிவு நேற்று மாலை 5 மணிக்கு தொடங்கியது. இந்த தேர்வுக்கு விண்ணப்பம் செய்வதற்கான கால அவகாசம் வரும் 21ம் தேதி நள்ளிரவு 11.55 மணியுடன் முடிவுக்கு வருகிறது. விருப்பம் உள்ளவர்கள் natboard.edu.in என்ற இணையதளம் மூலமாக விண்ணப்பம் செய்யலாம். இந்திய அரசியல் தேர்வு மையங்களை ஒதுக்கும் நடைமுறை ஆகஸ்ட் 11ம் தேதி தொடங்கும். இந்த முறை முதலில் வருபவர்களுக்கே முன்னுரிமை என்ற முறையில் தேர்வு மையங்கள் அமைக்கப்படும் இடங்கள் இருக்காது. இதனால் முன்கூட்டி விண்ணப்பம் செய்வோருக்கும் குறிப்பிட்ட நகர் அல்லது குறிப்பிட்ட தேர்வு மையங்களை ஒதுக்கீடு செய்வதில் முன்னுரிமை வழங்கப்படாது. விண்ணப்பத்தை 3 மாதத்திற்குள் எடுத்த புகைப்படத்துடன் சமர்ப்பிக்க வேண்டும். இவ்வாறு கூறப்பட்டுள்ளது






Printed by A.PONRAJ, published ,owned by A.PONRAJ and printed at "SRI SAAI PRINTERS"No.122,Neethipathi, Rajasekaran Street,vaarasanthai road,Sivaganga and published at 6 a, madurai road Sivaganga, Sivaganga district,Editor A.PONRAJ. Ph: 8508502161